செய்தி வெளியீடு எண்:116 நாள் : 22.02.2016

## செய்தி வெளியீடு

## தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ள அரசு இ–சேவை மையங்கள் குறித்து "TACTV" என்ற முகநூல் பக்கம் (Facebook Page) உருவாக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் உத்தரவின் பேரில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தமிழகம் முழுவதும் அரசு இ–சேவை மையங்களை அமைத்து நிர்வகித்து வருகிறது. தலைமைச் செயலகம், அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், சென்னை மாநகராட்சி தலைமை அலுவலகம், சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டல அலுவலகங்கள், அனைத்து பகுதி அலுவலகங்கள் மற்றும் அனைத்து கோட்ட அலுவலகங்கள், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய நான்கு மண்டல பாஸ்போர்ட் அலுவலகங்கள் என மொத்தம் 470 இடங்களில் அரசு இ–சேவை மையங்களை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் அமைத்து நிர்வகித்து வருகிறது.

அரசு இ–சேவை மையங்களின் மூலம், பொதுமக்கள் வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் போன்ற வருவாய்த்துறையின் 16 சேவைகள், முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டம் போன்ற சமூக நலத் துறையின் 13 சேவைகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை ஆகிய துறைகளின் சார்பில் வழங்கப்படும் கல்வி உதவித் தொகை தொடர்பான 6 சேவைகள், சென்னை மாநகராட்சியின் சார்பில் 4 சேவைகள், அரசின் இதர திட்டங்களான ஆதார் அட்டை, வாக்காளர் அடையான அட்டை, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நடத்தப்படும் அரசுப் பணி தேர்விற்கு விண்ணப்பித்தல் போன்ற 54 சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், அரசு இ–சேவை மையங்கள் மூலம் மின் கட்டணம் குடிநீர் கட்டணம், குடிநீர் வரி செலுத்தி ரசீதும் பெற்றுக் கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசு இ–சேவை மையங்களில் பாஸ்போர்ட் பெறுவதற்கு ஆன்–லைன் மூலம் விண்ணப்பம் செய்வதற்கும், பாஸ்போர்ட் சேவை கேந்திரா செல்வதற்கான முன் அனுமதி நாள் மற்றும் நேரம் பெற்றுக்கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அரசு இ–சேவை மையம் தொடர்பான தகவல்களை செல்பேசியில் தெரிந்துகொள்வதற்கு TACTV என்ற செயலியை (App) கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து (Google Play Store) இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இதுவரை **7832** நபர்கள் இச்செயலியினை பதிவிறக்கம் செய்துள்ளனர். இச்செயலியை பயன்படுத்தி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் அரசு இ–சேவை மையங்களின் முகவரி, வரைபடம், மையத்திற்கு செல்லும் வழி, வழங்கப்படுகின்ற சேவைகள் ஆகியவற்றை தெரிந்து கொள்ளலாம்.

தற்போது தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தால் நடத்தப்படும் அரசு இ–சேவை மையங்களுக்கென்று பிரத்தியேகமாக "TACTV" என்ற முகநூல் பக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த முகநூல் பக்கத்தில் அரசு இ–சேவை மையங்கள் தொடர்பான அனைத்து தகவல்களும் இடம்பெற்றுள்ளன. பொதுமக்கள் மற்றும் மாணவச் செல்வங்கள் இந்த முகநூல் பக்கத்தினை நல்லமுறையில் பயன்படுத்தி, அரசு இ–சேவை மையங்களின் முகவரி, வழங்கப்படும் சேவைகள் மற்றும் அதற்குண்டான கட்டணம் ஆகியன குறித்த விவரங்களை தெரிந்துகொள்ளலாம். தாங்கள் தெரிவிக்கின்ற ஆலோசனைகள் மற்றும் குறைகள் மீது இந்நிறுவனம் தக்க நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லாமல், அது தொடர்பான விவரங்களையும் இந்த முகநூல் பக்கத்தில் பதிவு செய்யும். எனவே, தமிழ்நாடு அரசின் கேபிள் டிவி நிறுவனத்தின் இ–சேவை மையங்கள் குறித்த முகநூல் பக்கத்தினை அனைவரும் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**